இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 349 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆடி 13 – செவ்வாய்க்கிழமை 29 ஜுலை 2025 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 349 : Thiruvalluvar Year - 2056 - Aadi 13 - Tuesday 29 July 2025 - Trichy ★★ 8 Pages ₹ 5.00

## தமிழ்நாட்டு இரயில்வே திட்டங்கள் – மீனவர்கள் வாழ்வாதாரம் – சேலம் பாதுகாப்பு தொழிற்பூங்கா – மாணவர்களின்

# கல்விக்கான நிலுவைத் தொகை ரூ.2151.59 கோடியை உடனே விடுவிப்பீர்!

## பிரதமரிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் கோரிக்கை !

**சென்னை, ஜுலை 29 -**

**தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட வேண்டிய முக்கிய திட்டப் பணிகள் மற்றும் கோரிக்கைகள் குறித்த மனுவினை பிரதமர் நரேந்திர மோடி அவர்களிடம் அளித்துள்ளது தொடர்பாக, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-**

தமிழ்நாட்டு மாணவர்களின் கல்விக்கான நிதி, ஏழை நடுத்தர மக்களின் போக்குவரத்துக்காக இரயில் திட்டங்கள், மீனவர்களின் வாழ்வாதாரம், சேலம் பாதுகாப்புத் தொழிற்பூங்கா ஆகியவற்றை வலியுறுத்தி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களிடம் கோரிக்கை மனு அளித்துள்ளோம்.

மக்களின் உணர்வுகளுக்கும் மாநிலத்தின் வளர்ச்சிக்கும் மதிப்பளித்து உரிய தீர்வினைப் பிரதமர் வழங்குவார் என்று நம்புகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட கோரிக்கை மனு விவரங்கள்**

தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட வேண்டிய முக்கிய திட்டப் பணிகள் மற்றும்



கோரிக்கைகள் குறித்த மனுவிற்கு 26.7.2025 அன்று காலை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒப்புதல் அளித்திருந்தார்.

மேற்படி கோரிக்கை மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய விவரங்கள் பின்வருமாறு:

**சமக்ர சிக்ஷா திட்டத்தின் கீழ் நிதி!**

தமிழ்நாடு அரசால் 2018ஆம் ஆண்டு முதல் சமக்ரா சிக்ஷா திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாடு தொடர்ந்து செயல்திறனை அதிகரித்துள்ளது. தேசியக் கல்விக் கொள்கை (NEP) 2020 முழுமையாக அமல்படுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையை ஒன்றிய அரசு வைத்துள்ளது. ஆனால், தமிழ்நாடு அரசு சட்டப்பூர்வ மற்றும் கொள்கை அடிப்படைகளில் தேசியக் கல்விக் கொள்கை (NEP) 2020 இன் சில அம்சங்களில், குறிப்பாக மும்மொழிக் கொள்கை மற்றும் 5+3+3+4 கட்டமைப்பில் பள்ளிக் கட்டமைப்பு மாற்றம் ஆகியவற்றில் தனது மாற்றுக்கருத்துகளை தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு பள்ளிக் கல்வி அமைப்பில் தற்போது 43.90 லட்சம் மாணவர்கள், 2.20 லட்சம் ஆசிரியர்கள் மற்றும் 32,000க்கும் மேற்பட்ட உதவிப் பணியாளர்கள் உள்ளனர். இந்த அளவிலான மற்றும் முக்கியத்துவ மிக்க திட்டத்திற்கு தேவையான நிதிகளை வழங்காமல் இருப்பது, இலட்சக் கணக்கான மாணவ – மாணவியரின் எதிர்காலத்தை பாதித்து வருகிறது.

இந்த சூழ்நிலையில், இந்தியப் பிரதமர் அவர்களிடம், 2024-25 ஆம் நிதியாண்டிற்கான நிலுவையிலுள்ள ரூபாய் 2,151.59 கோடி ஒன்றிய அரசின் பங்கை உடனடியாக விடுவிக்கவும், 2025-26ஆம் ஆண்டிற்கான முதல் தவணை நிதியையும்



விரைவாக வழங்கிடவும், PM SHRI புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதை நிபந்தனையாக்காமல் நிதியினை விடுவிக்கவும் முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

**தமிழ்நாட்டிற்கான இரயில்வே திட்டங்கள்!**

பத்தாண்டுகளுக்கு முன்பு அனுமதிக்கப்பட்டு செயல்படுத்தப்படாமல் உள்ள பல முக்கியமான இரயில் பாதை திட்டங்களான திண்டிவனம்-செஞ்சி-திருவண்ணாமலை (70 கி.மீ) இரயில் பாதை, ஈரோடு – பழனி (91 கி.மீ) இரயில் பாதை, அருப்புக்கோட்டை வழியாக மதுரை – தூத்துக்குடி (60 கி.மீ)இரயில் பாதை, அத்திப்பட்டு – புத்தூர் (88 கி.மீ.) இரயில் பாதை, மகாபலிபுரம் வழியாக சென்னை - கடலூர் (180 கி.மீ) இரயில் பாதை ஆகிய திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கக்கேட்டும்;

87 கி.மீ நீள திருவனந்தபுரம் – கன்னியாகுமரி இரட்டை பாதை பணியினை துரிதப்படுத்திடவும், திருப்பத்தூர் - கிருஷ்ணகிரி - ஓசூர் புதிய பாதைக்கு ஒப்புதல் அளித்திடவும், கோயம்புத்தூர் - பல்லடம் கரூர், கோயம்புத்தூர் - கோபிசெட்டிபாளையம் - பவானி சேலம், மதுரை – மேலூர் – துவரங்குறிச்சி – விராலிமலை – இனாம்குளத்தூர் மற்றும் மதுரை நகரைச் சுற்றி புறநகர் ரயில் ஆகிய திட்டங்களுக்கு வழித்தட ஆய்வு/விரிவான திட்ட அறிக்கை ஒப்புதல் கோரியும்;

சென்னை பெருநகரப் பகுதியில் புறநகர் இரயில் சேவைகளை உச்ச நேரங்களில் இயக்க இடைவெளி நேரத்தை குறைத்திட வும், குளிர்சாதன மற்றும் குளிர்சாதன வசதி இல்லாத மின்சார இரயில் பெட்டிகளை (EMU) கூடுதலாக ஒதுக்கீடு செய்திடவும், முக்கிய புறநகர் வழித்தடமான தாம்பரம் மற்றும் செங்கல்பட்டு இடையேயான 4வது வழித்தடத்தை அனுமதித்து

**தொடர்ச்சி 3 ஆம் பக்கம்**



## நலம்பெற வாழ்த்திய கலைஞரின் உடன்பிறப்புகள் உள்ளிட்ட

# அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றி!

## இல்லம் திரும்பிய முதல்வர் மு.க.ஸ்டாலின் உருக்கமிகு பதிவு!

**சென்னை, ஜுலை 29-**

**“மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது அக்கறையுடன் விசாரித்து தாம் நலம்பெற வாழ்த்திய அனைத்துக் கட்சித் தலைவர்கள், நீதியரசர்கள் உள்ளிட்ட தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றி”யை இல்லம் திரும்பிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

**மருத்துவமனையில் சிகிச்சை பெற்று குணமடைந்து நேற்று முன்தினம் (27.7.2025) இல்லம் திரும்பிய பின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலை தளங்களில் வெளியிட்ட பதிவு வருமாறு:-**

**நலம்பெற்று வீடு திரும்பினேன்!**

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது அக்கறையுடன் விசாரித்து, நலம் பெற வாழ்த்திய அனைத்து அரசியல் இயக்கத் தலைவர்கள் – மக்கள் பிரதிநிதிகள் – நீதியரசர்கள் – அரசு அதிகாரிகள் – திரைக் கலைஞர்கள் – என் உயிரோடு கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன் பிறப்புகள் உள்ளிட்ட தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றி!

**மருத்துவர்கள் – செவிலியர்களுக்கு நன்றி!**

மருத்துவமனையில் சிறப்பான



சிகிச்சையளித்து, நான் விரைந்து நலம் பெற உறுதுணையாய் இருந்த மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் மீண்டும் அன்பும், நன்றியும்!

**உங்களுக்காக உழைப்பை வழங்கும் என் கடமையை என்றும் தொடர்வேன்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.